**அசல் வழக்கு எண். 48/2013 தேதி-10.07.2025**

**வா.சா.1 - பிச்சையம்மாள்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் எனது மகன் இரவிக்குமார், எனது இரண்டு கொழுந்தனார்கள் அய்யனார் மற்றும் வன்னிமுத்து ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்கள். எனது மகன் கையொப்பம் செய்த வேறு ஏதாவது பொது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது மகனின் கையொப்பம் உள்ள வீட்டு மனை பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வீட்டு மனை பத்திரம் எப்போது ஏற்பட்டது என்றால் எங்கள் பங்கை எங்களுக்கு கொடுத்தபோது ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பத்திரம் ஆகும் மேற்படி வீட்டு மனை பத்திரம் எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றால் 1911 ல் ஏற்பட்ட ஆவணமாகும்.

2. சாட்சி மீண்டும் 2011 ல் ஏற்பட்டது என்று கூறுகிறார். மேற்படி வீட்டு மனை பத்திரம் எவ்வளவு ரூபாய்க்கு முத்திரை தாள் வாங்கப்பட்டது என்றால் நியாபகம் இல்லை. யார் பெயரில் மேற்படி வீட்டு மனை பத்திரம் வாங்கப்பட்டது என்றால் எனது மகன் பெயரில் வாங்கப்பட்டது. மேற்படி பத்திரத்தின் பதிவு கட்டணம் எவ்வளவு செலுத்தினோம் என்றால் நியாபகம் இல்லை. மேற்படி ஆவணம் எந்த பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் கீழ் நங்கவரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. மேற்படி கீழ் நங்கவரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தை தான் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் எந்த சர்வே எண் மற்றும் எவ்வளவு விஸ்தீரனம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

3. மேற்படி பத்திரத்தில் உள்ள சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது மாமனார் சம்பாதித்த சொத்தாகும். அதன்படி எனது மகனுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். எனது மாமனார் மேற்படி சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி தெரியாது. எனது மகன் பெயரில் பத்திரம் ஏற்பட்ட போது எனது மாமனார் வாங்கியதற்கான மூல பத்திரத்தை காண்பித்து தான் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. பட்டாவின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது. பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் அய்யனார் மற்றும் வன்னிமுத்து ஆகியோர் பெயரில் கூட்டு பட்டாவாக இருந்தது. மேற்படி பட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. எனது மகன் பெயரில் பத்திரம் ஏற்பட்ட பின்னிட்டு பட்டா அவரது பெயரில் ஏற்பட்டதா என்றால் இல்லை. பத்திரம் ஏற்படுத்திய ஆறு மாதங்களில் அவர் இறந்துவிட்டார். தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் எனது மகனின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் பெற்று அதன் அடிப்படையில் அவரது வாரிசுகளாகிய வாதிகளாகிய எங்கள் நால்வர் பெயரில் பட்டா உள்ளது. மேற்படி பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பட்டாவை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே வாங்கிவிட்டோமா என்றால் வாங்கிவிட்டோம். எனது மகனின் இறப்பிற்கு பிறகு எங்கள் நால்வர் பெயரில் பட்டா ஏற்பட்ட விவரத்தை வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

5. நான் சொல்வது போல் 10.08.1996 ம் தேதி எனது மகன், அய்யனார் மற்றும் வன்னிமுத்து ஆகியோர் இடையே வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டதாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள ரேகை வன்னிமுத்துவின் கைரேகை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வாதிகளாகிய எங்களுக்கு தாவா சொத்தில் பாத்தியம் ஏற்பட்டுள்ளது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து எந்த வித ஆவணங்களையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. ஏக்கர் 1.18 செண்ட் உள்ள நிலத்தை வடபுறம் உள்ள 59 சென்ட் நிலத்தை அய்யனாருக்கும் தென்புறம் உள்ள 59 சென்ட் நிலம் 1ம் பிரதிவாதிக்கும் வாய்மொழியாக பிரித்து கொண்டுள்ளார்கள் என்றும், மேற்படி இருவரும் தொடர்ந்து நில உரிமையாளருக்கு தனிப்பட குத்தகை செலுத்தி இரசீதுகள் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.529/10 ல் உள்ள 12 செண்ட்டை வடபுறம் உள்ள 6 சென்ட் நிலத்தை அய்யனாருக்கும் தென்புறம் உள்ள 6 சென்ட் நிலம் 1ம் பிரதிவாதிக்கும் பிரிக்கப்பட்டு தனிப்பட அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பெரியசாமி மற்றும் ஜெகநாதன் ஆகியோர் 1ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். வீட்டுமனையை பொறுத்தவரையில் 1ம் பிரதிவாதி அவரது மகன்களுக்கு 16.03.2011 ம் தேதியிட்ட பதிவுசெய்யப்பட்ட ஒரு தானசெட்டில் மென்ட் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ள விவரம் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது.

7. தாவா ஆ அட்டவனை சொத்தான வீட்டுமனையில் தென்புற பாதியில்

தென்புறம் நோக்கி ஒரு ஓட்டுவில்லை வீடு உள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி ஓட்டுவீடு கட்டுவதற்கு முன்பு கூரை வீடு இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி ஓட்டுவீல்லை வீட்டிற்கு வன்னிமுத்துவின் மகன் 3 ம் பிரதிவாதி பெரியசாமி பெயரில் வீட்டு வரி இரசீது, மின் இணைப்பு இரசீது ஏற்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை பற்றி எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றும், தாவா சொத்தை நாங்கள் அனுபவம் செய்து வரவில்லை என்றால் சரியல்ல.

8. 16.03.2011ம் தேதியில் ஏற்பட்ட பத்திரத்தில் ஜெகநாதனுக்கும் சொத்து கிடைத்துள்ளதால் ஜெகநாதனும் இவ்வழக்கின் அவசிய தரப்பினர் ஆவார் என்றால் சரியல்ல. அய்யனார் உயிருடன் தான் இருக்கிறார். அவருக்கு எதிராக இவ்வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை. எதற்காக வன்னிமுத்து மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் எங்களுக்கு பிரித்து கொடுத்த சொத்தை பொறுத்து எங்களுக்கு உரிமை இல்லை என்று அவர்கள் பிரச்சனை செய்ததின் அடிப்படையில் இ,வ்வழக்கை தாக்கல் செய்தோம். மேற்படி பிரச்சனை எந்த தேதி, மாதம் , வருடத்தில் நடந்தது என்றால் நியாபகம் இல்லை. மேற்படி பிரச்சனை சம்மந்தமாக காவல் துறையில் புகார் அளித்துள்ளோமா என்றால் கொடுத்துள்ளோம். மேற்படி புகார் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கொடுத்தோம்.

9. காவல் துறையினரால் மேற்படி வழக்கானது உரிமையியல் வழக்காக உள்ளதால் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகுமாறு முடிக்கப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்தோம். மேற்படி புகாரின் நகல் ஏதும் தாக்ல்ல செய்துள்ளோமா என்றால் இல்லை. மேற்படி விவரங்களை எனது வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நானும், மற்ற வாதிகளும் குளித்தலையில் சுமார் 40 வருடங்களாக குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எந்த நாளிலும் நாங்கள் செல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை நாங்கள் அனுபவித்து வருவதாக காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் குடும்ப சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தில் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. அய்யனார் மற்றும் வன்னிமுத்துவிற்கு இடையே எத்தனை வருடங்களாக

விரோதம் என்றால் அவர்களுக்குள் விரோம் ஏதும் இல்லை. ஒன்றாக தான் உள்ளார்கள். மேற்படி இரண்டு குடும்பங்களுக்கும் சுமார் 20 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்றும், விரோதம் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**